# ஸ்ரீ:
# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்
# இராமானுசர் ஆயிரமாவது ஆண்டு திருநட்சத்திரம் வைபவக் கொண்டாட்டங்கள்

மனிதகுல வரலாற்றில் வியப்பூட்டும் தத்துவ மேதையாக விளங்குபவர் இராமானுசர் ஆவர். இவர் மனித பண்புகளின் களஞ்சியம். அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவஞானி. மாசு மறுவற்ற ஆத்மகுணச்செம்மல். இப்பூவுலகில் வைகுந்தத்தைக் காட்டிய வித்தகர். வைணவ சமயத்தையும், அனைத்து சமுதாயமக்களையும், திருக்கோயில் வழிபாட்டு மறைகளையும் செம்மைப்படுத்திய சிறப்பு மிக்க சமுதாயச் சீர்த்திருத்தவாதி. சமநோக்கும் சமூக நோக்கும் கொண்ட தவச்சீலர். அதன் காரணமாக வைணவ நெறியை மக்கள் நெறியாக்கி அன்பு வழியை வளர்த்தவர்.

திருவரங்கம் பெரிய கோயிலில் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தியவர். கி.பி. 1017ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்பூதூர் என்னும் ஊரில் பிறந்தவர். காஞ்சியில் யாதவப்ரகாசர் என்பாரிடம் வேதாந்தப்பாடங்களைப் பயின்று, ஆளவந்தாருடைய விருப்பத்திற்கேற்ப திருவரங்கத்திற்கு அழைத்து வரப்பட்டார். சுமார் 80 ஆண்டுகள் திருவரங்கத்திலே தற்போதைய வடக்கு உத்திர வீதியில் அமைந்துள்ள ஸ்ரீரங்கநாராயண ஜீயர் மடத்தில் வாழ்ந்து வந்தார். வாழ்க்கையில் பல இன்னல்களை எதிர்கொண்ட இராமானுசர் ஓர் ‘கலங்கரைவிளக்குபோலே’ விளங்குகிறார். இராமானுசருடைய ஆயிரமாவது ஆண்டு அவதார நன்னாள் கொண்டாட்டங்கள் கி.பி. 2017 மே முதல் நாள் உலகமெங்கும் கொண்டாடப்படவுள்ளது. இராமானுசருடைய வாழ்க்கையோடு மிகவும் பின்னிப்பிணைந்த திருவரங்கத்தில் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் ஆயிரமாவது ஆண்டு அவதார நன்னாள் மிகச் சீரிய முறையில் கொண்டாடப்படவுள்ளது.

## எழுத்துத் தேர்வு

இராமானுசருடைய வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு கேள்விகள் கேட்கப்படும். 3ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ / மாணவிகள் இதில் பங்கு கொள்ளலாம்.

கேட்கப்படும் கேள்விகள் தேர்வில் பங்கு கொள்ளும் மாணவ / மாணவிகளுக்கு வழங்கப்படும். இதில் 200 வினாக்கள் அமைந்திருக்கும். கேள்விக்குரிய விடையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்வில் முன்பே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களிலிருந்து கேட்கப்படும் 50 வினாக்களுக்கு 60 நிமிடங்களில் பதிலளிக்கப்பட வேண்டும்.

## எழுத்து தேர்விற்கான வினாக்கள்

1. இராமானுஜருடைய தந்தையின் பெயர் என்ன ?
(அ) கேசவ சோமயாஜி (ஆ) யமுனைத்துறைவர்
(இ) நாதமுனிகள் (ஈ) சொட்டைநம்பிகள்
2. இராமானுஜர் அவதரித்த ஊரின் பெயர் என்ன ?
(அ) திருவரங்கம் (ஆ) காஞ்சிபுரம்
(இ) திருமலை (ஈ) ஸ்ரீபெரும்பூதூர்
3. திருப்பாவை ஜீயர் என்பது யாரைக் குறிக்கும் ?
(அ) ஆளவந்தார் (ஆ) இராமானுஜர்
(இ) பெரியநம்பி (ஈ) நாதமுனிகள்
4. இராமானுஜருடைய மனைவியின் பெயர் என்ன ?
(அ) தஞ்சம்மாள் (ஆ) பொன்னாய்ச்சியார்
(இ) திரிபுராதேவி (ஈ) கொங்குப்பிராட்டி
5. திருமலையில் இராமானுஜருடை ஆணையப்படி நந்தவனம் அமைத்து பூமாலைகளைத் தொடுத்தவர் யார் ?
(அ) முதலியாண்டான் (ஆ) பெரியதிருமலை நம்பி
(இ) அநந்தாழ்வான் (ஈ) ஆளவந்தார்
6. இராமானுஜர் இந்நிலவுலகில் வாழ்ந்த ஆண்டுகளின் எண்ணிக்கை ?
(அ) 100 (ஆ) 110
(இ) 120 (ஈ) 130
7. இராமானுஜர் நூற்றந்தாதி என்ற துதி நூலை எழுதியவர் யார் ?
(அ) முதலியாண்டான் (ஆ) கூரத்தாழ்வார்
(இ) பராசரபட்டர் (ஈ) திருவரங்கத்தமுதனார்
8. இராமானுஜர் யாருடைய நிலவுலகப் பிறப்பாக கொள்ளப்படுகிறார்
(அ) ஆதிசேஷன் (ஆ) கருடன்
(இ) விஷ்வக்சேனர் (ஈ) ஜயன்
9. யதிராஜர் என்றால் யாரைக் குறிக்கும் ?
(அ) ஆளவந்தார் (ஆ) கோவிந்த ஜீயர்
(இ) அருளாளப் பெருமாள் எம்பெருமானார் (ஈ) இராமானுஜர்
10. இராமானுஜருக்கு அமைந்திருந்த இயர்பெயர் என்ன ?
(அ) இளையாழ்வார் (ஆ) யதிராஜன்
(இ) சடகோபன் பொன்னடி (ஈ) கோயிலண்ணர்
11. எம்பெருமானார் என்ற பெயரை இராமானுஜருக்குச் சூட்டியவர் யார் ?
(அ) திருக்கோட்டியூர் (ஆ) ஆளவந்தார்
(இ) பெரியதிருமலை நம்பி (ஈ) பெரியநம்பி
12. இராமானுஜர் காஞ்சியுரத்தில் வேதாந்த பாடம் பயின்றது யாரிடம் ?
(அ) பெரியதிருமலைநம்பி (ஆ) திருக்கச்சிநம்பி
(இ) யாதவப்ரகாசர் (ஈ) ஆளவந்தார்
13. இராமானுஜர் துறவரத்தை மேற்கொண்டது எந்த ஊரில் ?
(அ) திருவரங்கம் (ஆ) ஸ்ரீபெரும்புதூர்
(இ) திருமலை (ஈ) காஞ்சிபுரம்
14. கூரத்தாழ்வான் என்பவர் யார் ?
(அ) இராமானுசருடைய சிஷ்யர் (ஆ) பெரிய திருமலை நம்பி சிஷ்யர்
(இ) ஆளவந்தாரின் சிஷ்யர் (ஈ) நாதமுனிகளின் சிஷ்யர்
15. யாமுனாசார்யர் என்று அழைக்கப்படுவர் யார் ?
(அ) ஆளவந்தார் (ஆ) சொட்டைநம்பி
(இ) மணக்கால்நம்பி (ஈ) உய்யக்கொண்டார்

16. இராமானுசருக்கு திருவாய்மொழியின் ஆழ்பொருளைத் தெளிவுற எடுத்தியம்பியவர் யார் ?
(அ) பெரியநம்பி (ஆ) திருகோட்டியூர்நம்பி
(இ) திருமாலையாண்டான் (ஈ) திருவரங்கப் பெருமாள் அரையர்

17. காஞ்சிபுரம் தேவப்பெருமாள் அருளிச்செய்ததாக 6 வார்த்தைகளை இராமானுசருக்குக் கூறியவர் யார் ?
(அ) பெரியநம்பி (ஆ) திருவரங்கப்பெருமாள் அரையர்
(இ) திருக்கச்சிநம்பி (ஈ) திருமாலையாண்டான்

18. இராமானுசரின் மூத்த சகோதரியின் பெயர் என்ன ?
(அ) பூமிப்பிராட்டி (ஆ) பெரியபிராட்டி
(இ) ஸ்ரீரங்கநாயகி (ஈ) பெருந்தேவி

19. இராமனுசர் காஞ்சிபுரத்தில் தினந்தோறும் திருவாராதனத்திற்கு நீர் எடுத்து வந்த கிணற்றுக்கு பெயர் என்ன ?
(அ) அத்தியூரான் கிணறு (ஆ) மேற்கு வாசல் கிணறு
(இ) சாலைக் கிணறு (ஈ) வேகவதிக்கிணறு

20. பெரியநம்பி குமாரத்தியின் பெயர் என்ன ?
(அ) தேவகிப்பிராட்டி (ஆ) அத்துழாய்
(இ)அலர்மேல்மங்கை (ஈ) ஸ்ரீரங்கநாயகி

21. திருக்கோட்டியூர் நம்பியின் குமாரத்தி பெயர்
(அ) தேவகி (ஆ) பெருந்தேவி
(இ) ஜானகி (ஈ) யதுகிரி

22. திருவரங்கத்தில் கூரத்தாழ்வான் திருமாளிகை அமைந்துள்ள இடம்
(அ) கீழைசித்திரை வீதி (ஆ) மேலைசித்திரை வீதி
(இ) வடக்குசித்திரை வீதி (ஈ) தெற்கு சித்திரை வீதி

23. மாறனேரிநம்பி என்பார் யார் ?
(அ) பெரியநம்பியின் சீடர் (ஆ) ஆளவந்தாரின் சீடர்
(இ) திருக்கோட்டியூர் நம்பியின் சீடர் (ஈ) பெரிய திருமலைநம்பியின் சீடர்

24. ஆளவந்தாரை பள்ளிப்படுத்திடும்போது எத்தனை விரல்கள் (புதைத்திடும்போது) மடங்காமல் இருந்தன
(அ) 1 (ஆ) 2
(இ) 3 (ஈ) 4

25. எம்பார் என்று அழைக்கப்படும் துறவியின் இயற்பெயர் என்ன ?
(அ) கோவிந்தன் (ஆ) கோபாலன்
(இ) வெங்கடேசன் (ஈ) ஸ்ரீ நிவாசன்

26. இராமனுஜர் நூறுதடா வெண்ணெய் மற்றும் நூறுதடா அக்காரஅடிசில் ஸமர்ப்பித்தது
(அ) திருமலையில் (ஆ) ஆதிருமாலிருஞ்சோலையில்
(இ) ஸ்ரீவில்லிபுத்தூரில் (ஈ) ஆழ்வார் திருநகரியில்

27. ஸ்ரீராமாயணத்தின் ஆழ்பொருளை இராமானுசர் பயின்றது
(அ) திருக்கோட்டியூர் நம்பி (ஆ) பெரியதிருமலைநம்பி
(இ) திருமாலையாண்டான் (ஈ) பெரியநம்பி

28. மேலைக்கோட்டை திருநாராயணபுரம் என்ற ஊர் எங்கு அமைந்துள்ளது ?
(அ) ஆந்திரா (ஆ) கர்நாடகா
(இ) கேரளா (ஈ) தமிழ்நாடு

29. தமருகந்த திருமேனி என்ற அழைக்கப்படும் இராமானுஜரின் அர்ச்சாமூர்த்தி அமைந்துள்ள ஊர்
(அ) காஞ்சிபுரம் (ஆ) திருவரங்கம்
(இ) திருக்குறுங்குடி (ஈ)திருநாராயணபுரம்

30. தானான திருமேனி அமைந்துள்ளது எங்கே ?
(அ) ஸ்ரீபெரும்பூதூர் (ஆ) காஞ்சிபுரம்
(இ) திருக்குறுங்குடி (ஈ) திருவரங்கம்
31. தாமுகந்த திருமேனி அமைந்துள்ள ஊர்
(அ) ஸ்ரீபெரும்புதூர் (ஆ) காஞ்சிபுரம்
(இ) திருகுறுங்குடி (ஈ) திருவரங்கம்
32. திருக்கோயில் நிர்வாகத்தை செம்மையாக மேற்கொண்டிட இராமானுசர் 20 குழுக்களாக (கொத்துக்களாக. பிரித்தது)
(அ) ஸ்ரீபெரும்பூதூர் (ஆ) காஞ்சிபுரம்
(இ) திருகுறுங்குடி (ஈ) திருவரங்கம்
33. இராமானுஜர் 'ஐம்பத்திருவர்' என்றதொரு அமைப்பினை கோயில் நிர்வாகத்தை மேற்கொண்டிட நியமித்தது
(அ) ஸ்ரீபெரும்பூதூர் (ஆ) திருநாராயணபுரம்
(இ) திருக்குறுங்குடி (ஈ) திருவரங்கம்
34. இராமானுஜர் ஸந்நிதிக்குச் சென்றால் தலையிலே அனைத்து அடியார்களுக்கும் ஸாதிக்கப்படும் சடாரிக்குப்பெயர்.
(அ) பாதுகை (ஆ) முதலியாண்டான்
(இ) பொன்னடியான் செங்கமலம் (ஈ) இராமானுஜன்
35. திருக்கடிகை என்னும் திவ்யதேசத்திற்கு மற்றொரு பெயர் என்ன ?
(அ) சோளிங்கபுரம் (ஆ) காஞ்சிபுரம்
(இ) திருநாராயணபுரம் (ஈ) வானமாமலை
36. பிள்ளையுறங்கவாவில்லிதாஸரின் மனைவியின் பெயர் என்ன ?
(அ) திரிபுராதேவியார் (ஆ) பொன்னாய்ச்சியார்
(இ) ஆண்டாள் (ஈ) வஞ்சுளவல்லி
37. இராமானுஜருடைய திருமடைப்பள்ளியில் பணிசெய்தவர் யார் ?
(அ) கிடாம்பியாச்சான் (ஆ) முதலியாண்டான்
(இ) அனந்தாழ்வான் (ஈ) வரதாசார்யர்
38. இராமானுஜருக்கு தினந்தோறும் பாலமுது காய்ச்சித் தருபவர் யார் ?
(அ) கிடாம்பியாச்சான் (ஆ) முதலியாண்டான்
(இ) அனந்தாழ்வான் (ஈ) வடுகநம்பி
39. கூரத்தாழ்வானின் மனைவியின் பெயர் என்ன ?
(அ) ஆண்டாள் (ஆ) பெருந்தேவி
(இ) அலர்மேல்மங்கை (ஈ) யதுகிரி
40. கொங்குப்பிராட்டியின் இயற்பெயர் என்ன ?
(அ) சுமதி (ஆ) கோதை
(இ) ஸ்ரீரங்கநாயகி (ஈ) யதுகிரி
41. யதிராஜ விம்சதி என்னும் ஸம்ஸ்க்ருத நூலை இயற்றியவர் யார் ?
(அ) நிகமாந்ததேசிகன் (ஆ) வாளமாமுனிகள்மண
(இ) கூரத்தாழ்வான் (ஈ) வடுகநம்பி
42. யதிராஜ விம்சதி என்னும் ஸமஸ்க்ருத நூலை இயற்றியவர்
(அ) நிகமாந்ததேசிகள் (ஆ) மணவாளமாமுனிகள்
(இ) கூரத்தாழ்வான் (ஈ) வடுகநம்பி
43. ஸ்ரீமந்நாதமுனிகள் அவதரித்த ஊர்
(அ) ராஜமன்னார்குடி (ஆ) காட்டுமன்னார்குடி
(இ) காஞ்சிபுரம் (ஈ) ஸ்ரீரங்கம்

44. திருவாய்மொழி என்னும் திவ்யப்பிரபந்தத்தை அருளிச்செய்தவர்
(அ) திருமங்கையாழ்வார் (ஆ) நம்மாழ்வார்
(இ) குலசேகராழ்வார் (ஈ) மதுரகவியாழ்வார்
45. திருமாலை என்னும் திவ்யப்பிரபந்தத்தை அருளிச்செய்தவர் யார் ?
(அ) திருமங்கையாழ்வார் (ஆ) நம்மாழ்வார்
(இ) நம்மாழ்வார் (ஈ) தொண்டரடிப்பொடியாழ்வார்
46. உய்யங்கொண்டார் என்னும் ஆசார்யர் பிறந்த ஊர்
(அ) திருவரங்கம் (ஆ) திருவெள்ளறை
(இ)அன்பில் (ஈ) தென்திருப்பேர்
47. ஆண்டாள் அவதரித்த ஊர்
(அ) திருவில்லிபுத்தூர் (ஆ) திருமாலிருஞ்சோலை
(இ) திருக்குறுங்குடி (ஈ) திருவரங்கம்
48. இராமானுஜர் இயற்றிய நூல்கள்
(அ) 9 (ஆ) 12
(இ) 15 (ஈ) 18
49. இராமானுஜர் திருக்கோட்டியூர் நம்பியிடம் மறைபொருளின் விளக்கத்தைப் பெறுவதற்கு சென்று வந்தது
(அ) 10முறை (ஆ) 12முறை
(இ) 14 முறை (ஈ) 18 முறை
50. இராமானுஜர் திருமலையில் திருவேங்கடமுடையான் திருமுன்பு ஆற்றிய உரையின் நூல் வடிவம்
(அ) ஸ்ரீபாஷ்யம் (ஆ )நித்யம்
(இ) சரணாகதி கத்யம் (ஈ) வேதாத்த ஸங்க்ரஹம்
51. பங்குனி உத்திரதன்று நம்பெருமாளுக்காக ஸ்ரீரங்கம் திவ்ய தம்பதிகளிடம் இராமானுஜர் சரணாகதி செய்து அருளிச் செய்த நூலின் பெயர்
(அ) கத்யத்ரயம் (ஆ) வேதாந்த தீபம்
(இ) ஸ்ரீபாஷ்யம் (ஈ) நித்யம்
52. இராமானுஜர் அவதரித்த ஆண்டு
(அ) பிங்களவருடம் (ஆ) மன்மத வருடம்
(இ) பிரபவ வருடம் (ஈ) சுக்ல வருடம்
53. வேதவ்யாஸரின் ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு இராமானுஜர் எழுதிய உரை விளக்கத்தின் பெயர் என்ன ?
(அ) நித்யம் (ஆ) சரணாகதி கத்யம்
(இ) வேதார்ந்த ஸங்க்ரஹம் (ஈ) ஸ்ரீபாஷ்யம்
54. வேதவ்யாஸரின் ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு இராமானுஜர் எழுதிய உரை விளக்கத்தின் பெயர் என்ன ?
(அ) 345 (ஆ) 545
(இ) 445 (ஈ) 335
55. பெரியநம்பியின் குமாரர் பெயர் என்ன ?
(அ) மணவாளமாமுனிகள் (ஆ) முதலியாண்டான்
(இ) நம்பிள்ளை (ஈ) தெற்காழ்வான்
56. திருக்கோட்டியூர் நம்பியின் குமாரார் ?
(அ ) மணவாளமாமுனிகள் (ஆ) முதலியாண்டான்
(இ) நம்பிள்ளை (ஈ) தெற்காழ்வான்
57. வடுகநம்பி என்பவர் எழுதிய நூலின் பெயர் என்ன ?
(அ) ஸ்ரீயதிராஜ வைபவம் (ஆ) யதிராஜ விம்சதி
(இ) யதிராஜ மங்களம் (ஈ) யதிராஜ ஸப்ததி

58. தாடீ பஞ்சகம் என்னும் இராமானுஜரைப் பற்றிய துதி நூலில் எத்தனை ச்லோகங்கள் உள்ளன ?
(அ) 5 (ஆ) 10
(இ) 15 (ஈ) 20

59. சோழ அரசவையில் யமுனைத்துறைவர் யாருடன் வாதம் செய்தார் ?
(அ) ஆக்கியாழ்வான் (ஆ) நம்மாழ்வார்
(இ) அருளாளப்பெருமாள்.எம்பெருமானார் (ஈ) நஞ்சீயர்

60. நாதமுனிகளின் சிஷ்யர்களில் அஷ்டாங்க யோகம் கற்றவர் யார் ?
(அ) குருகைக்காவலப்பன் (ஆ) உய்யக்கொண்டார்
(இ) மணக்கால்நம்பி (ஈ) சொட்டை நம்பி

61. இராமானுஜருடைய ஆணைப்படி திருவாய்மொழிக்கு முதன்முதல் விளக்கவுரை வரைந்தவர் ?
(அ) பட்டர் (ஆ) நஞ்சீயர்
(இ) திருக்குருகைப் பிரான்பின்னான் (ஈ) சொட்டை நம்பி

62. கீதார்த்த ஸங்க்ரஹம் என்ற வடமொழி நூலை இயற்றியவர்யார் ?
(அ) வேதவ்யாஸர் (ஆ) பராசரர்
(இ) ஆளவந்தார் (ஈ) உய்யகொண்டார்

63. மாறனேரிநம்பி அவதரித்த திருநட்சத்திரம்
(அ) ஆனி ஆயில்யம் (ஆ) ஆனி உத்திராடம்
(இ) பங்குனி உத்திரம் (ஈ) மாசி புணர்பூசம்

64. ஆளவந்தார் எந்த நோயால் பாதிக்கப்பட்டார்
அ) ராஜபிளவை (ஆ) கல்லீரலில் கோளாறு
இ) இருதயத்தில் கோளாறு (ஈ) சிறுநீரகக் கோளாறு

65. பெரியநம்பியும் இராமானுஜரும் ஒருவரையொருவர் முதன்முதலில் நேரில் சந்தித்துக் கொண்டது ஏன் ?
(அ) காஞ்சிபுரம் (ஆ) திருவரங்கம்
(இ) திருக்கோட்டியூர்நம்பி (ஈ) பெரிய திருமலைநம்பி

66. இராமானுஜர் ஸ்ரீராமாயணத்தின் ஆழ்பொருளை ஓராண்டுகாலம் கேட்டது
(அ) பெரியநம்பி (ஆ) திருவரங்கப் பெருமாள் அரையர்
(இ) திருக்கோட்டியூர்நம்பி (ஈ) பெரிய திருமலைநம்பி

67. கூரத்தாழ்வான் அவதரித்தது
(அ) தை ஹஸ்தம் (ஆ) மார்கழி கேட்டை
(இ) வைகாசி விசாகம் (ஈ) ஆனி சுவாதி

68. இராமானுஜருடைய ‘பவித்ரம்’ என்று கொண்டாடப்படுபவர்
(அ) முதலியாண்டான் (ஆ) திருக்குருகை பிரான்பிள்ளான்
(இ)அனந்தாழ்வான் (ஈ) கூரத்தாழ்வான்

69. திருமலைநம்பியால் திருத்திப்பணிகொள்ளப்பட்ட கோவிந்தன் எந்த ஊரில் சிவனைப் பூசித்து கொண்டிருந்தார்
(அ) காஞ்சிபுரம் (ஆ) சிதம்பரம்
(இ) திருக்கோவிலூர் (ஈ) காளஹஸ்தி

70. மனம் திருந்தப்பெற்ற யாதவப்பிரகாசன் இராமானுஜரிடம் அடைக்கலம் புகுந்து துறவறம் மேற்கொண்ட பிறகு, அவருக்கு அமைந்த பெயர்
(அ) பேரருளான ஜீயர் (ஆ) அருளாளப்பெருமாள் எம்பருமானார்
(இ) கோவிந்த ஜீயர் (ஈ) எம்பார் ஜீயர்

71. திருவரங்கத்தில் பெரியபெருமாள் இராமானுஜர் வாதப்போர் புரிந்தது
(அ) உடையவர் (ஆ) திருப்பாவை ஜீயர்
(இ) யதிராஜர் (ஈ) லட்மண முனி

72. பெரியநம்பியின் குமாரத்தியான அத்துழாய் அகத்திற்கு இராமானுஜர் சீதனவெள்ளாட்டியாக யாரை அனுப்பி வைத்தார்

(அ) கிடாம்பியாச்சான் (ஆ) வடுகநம்பி
(இ) முதலியாண்டான் (ஈ) அனந்தாழ்வான்

73. இராமானுஜர் திருவரங்கத்திற்கு வந்து சேர்ந்த காலத்தில் திருக்கோயில் நிர்வாகத்தை யார் மேற்பார்வையிட்டு வந்தார்
(அ) திருவரங்கத்தமுதனார் (ஆ)முதலியாண்டான்
(இ) கூரத்தாழ்வான் (ஈ) எம்பார்

74. யஜ்ஞமூர்த்தி என்ற அத்வைத ஸந்நியாசியுடன் இராமனுசர் வாதப்போர் புரிந்த நாட்கள் எத்தனை ?
(அ) 10 நாட்கள் (ஆ) 20 நாட்கள்
(இ)18 நாட்கள் (ஈ) 24 நாட்கள்

75. கூரத்தாழ்வானின் குமாரர்கள் பெயர்
(அ) ஸ்ரீபராசர பட்டர் – வேதவ்யாஸபட்டர் (ஆ) பிள்ளைலோகாசார்யர் – அழகியமணவாளப் பெருமாள் நாயனார்
(இ) நம்பிள்ளை – நஞ்சீயர் (ஈ) கோட்டூரிலண்ணன் – திருக்கண்ண மங்கையாண்டான்

76. போதாயன விரிவுரையைத் தேடி இராமானுஜர் தம் சிஷ்யர்களுடன் சென்றது
(அ) அயோத்தி (ஆ) மதுரா
(இ) சாளக்கிராமம் (ஈ) காஷ்மீரத்தில் சரஸ்வதி பண்டாரம்

77. இராமானுஜ நூற்றந்தாதியில் அமைந்துள்ள பாசுரங்களின் எண்ணிக்கை
(அ) 100 (ஆ) 200
(இ) 108 (ஈ) 208

78. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு இராமானுஜருடைய கொள்கைகளையொட்டி உரை வரைந்தவர்
(அ) ஸ்ரீராமப்பிள்ளை (ஆ) பராசரபட்டர்
(இ) திருக்குருகைப்பிரான் பிள்ளான் (ஈ) நஞ்சீயர்

79. வானிட்ட கீர்த்தி வளர் கூரத்தாழ்வான் மகிழ வந்த தேனிட்ட தார் நம்பெருமாள் குமாரர் பட்டர் என்று கோசரமிட்டவர்
(அ) நஞ்சீயர் (ஆ) நம்பிள்ளை
(இ) பிள்ளை லோக்காச்சாரியார் (ஈ) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

80. பராசர பட்டர் ராமானுசர் வேதவ்யாஸபட்டர் ஆகியோரின் ஆசார்யராக யாரை நியமித்தார்
(அ) எம்பார் (ஆ) திருக்குருகைப்பிரான் பிள்ளான்
(இ) அருளாளப்பெருமாள் எம்பெருமானார் (ஈ) அனந்தாழ்வான்

81. திருவாய்மொழியை எந்த வேதத்தின் ஸாரமாக நம்முன்னோர்கள் அறுதியிட்டுள்ளனர்
(அ) ரிக் வேதம் (ஆ) யஜுர் வேதம்
(இ) சாம வேதம் (ஈ) அதர்வண வேதம்

82. அப்பனுக்கு ஆழியும் சங்கும் அளித்தவர் என்று கொண்டாடப்படுவர்
(அ) அனந்தாழ்வான் (ஆ) நம்மாழ்வார்
(இ) இராமானுஜர் (ஈ) எம்பார்

83. தில்லை திருச்சித்ரகூடம் என்றழைக்கப்படும் சிதம்பரத்தில் எழுந்தருளியிருந்து கோவிந்தராஜரை கடலில் எறிந்த சோழ மன்னன்
(அ) முதலாம் குலோத்துங்கன் (ஆ) இரண்டாம் குலோத்துங்கன்
(இ) மூன்றாம் குலோத்துங்கன் (ஈ) இரண்டாம் ராஜ ராஜன்

84. செல்வப்பிள்ளை அல்லது யதிராஜ சம்பத்குமாரன் என்று பெயர் சூட்டப்பட்ட உத்ஸவர் எழுந்தருளியிருக்கும் திருத்தலம்
(அ) திருவரங்கம் (ஆ) காஞ்சிபுரம்
(இ) திருமலை (ஈ) திருநாராயணபுரம்

85. இராமானுஜரின் 'ஞானபுத்திரர்' என்று கொண்டாடப்படுவர்
(அ) பராசரபட்டர் (ஆ) அருளாளப்பெருமாள் எம்பெருமானார்
(இ) அனந்தாழ்வான் (ஈ) திருக்குருகைப் பிரான்பிள்வான்

86. 'தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே ' என்கிற வாழித்திருநாமம் பெற்றவர் யார் ?
(அ) ஆளவந்தார் (ஆ) ஸ்ரீராமானுஜர்
(இ) ஸ்ரீ மணவாள மாமுனிகள் (ஈ) கூரத்தாழ்வான்

87. காஞ்சி வரதராஜப்பெருமாள் திருக்கோயில் விமானத்தின் பெயர் என்ன ?
(அ) புண்ணியகோடி விமானம் (ஆ) ப்ரணவாகார விமானம்
(இ) அஷ்டாங்க விமானம் (ஈ) ஆனந்த விமானம்

88. திருவரங்கத்தில் பெரியபெருமாள் யோகமுத்திரை கொள்ளும் கருவறைக்கு என்ன பெயர்
(அ) புண்ணியகோடி விமானம் (ஆ) ப்ரணவாகார விமானம்
(இ) அஷ்டாங்க விமானம் (ஈ) ஆனந்த விமானம்

89. இராமனுஜரைப் பாராட்டி ' கப்யாஸம் புண்டரீகம் எவம் அக்ஷிணி'என்ற வேத வாக்கியத்திற்கு அவர் சிறு வயதிலேயே சொன்ன பொருளைத் திரும்பச் சொல்லச் சொல்லிக் கேட்டு உகந்தது யார் ?
(அ) காஷ்மீர் அரசன் (ஆ) கலைமகள்
(இ) எம்பெருமான் (ஈ) போதாயனரிஷி

90. ஆளவந்தார் நம்மாழ்வாரின் எந்தப் பிரபந்தத்திற்கு உரைகாண எண்ணியிருந்தார் ?
(அ) திருவிருத்தத்திற்கு (ஆ) திருவாய்மொழிக்கு
(இ) பெரிய திருவந்தாதிக்கு (ஈ) பெரிய திருமொழிக்கு

91. பெரிய நம்பிகள் அவதரித்த திருநட்சத்திரம் எது ?
(அ) மார்கழி கேட்டை (ஆ) ஆனி – ஸ்வாதி
(இ) வைகாசி – விசாகம் (ஈ) ஐப்பசி – மூலம்

92. இராமானுஜருக்கு காவியாடை திரிதண்டங்களைத் தந்தருளி அவருக்கு 'இராமனுஜ முனி' எனத் திருநாமம் சூட்டியது யார் ?
(அ) பேரருளாளன் (ஆ) அரங்கநாதன்
(இ) ஆதிகேசவன் (ஈ) திருநாராயணன்

93. இராமானுஜர் சரமச்லோக விசேஷ ஆழ்பொருளை யாரிடம் கற்றார் ?
(அ) பெயரியநம்பிகள் (ஆ) திருக்கோட்டியூர் நம்பிகள்
(இ) திருமாலையாண்டான் (ஈ) மணக்கால்நம்பி

94. வடுகநம்பி எங்கு அவதரித்தார் ?
(அ) கொள்ளேகாலத்தில் (ஆ) சிறுபுத்தூரில்
(இ) சாளக்கிராமத்தில் (ஈ) திருக்குறுங்குடியில்

95. அனந்தாழ்வான் எங்கு அவதரித்தார் ?
(அ) கொள்ளேகாலத்தில் (ஆ) சிறுபுத்தூரில்
(இ) சாளக்ராமத்தில் (ஈ) திருக்குறுங்குடியில்

96. ப்ரபன் காயத்ரி என்ற சொற்றொடரால் குறிப்பிடப்படுவது யாது ?
(அ) காயத்ரி மந்த்ரம் (ஆ) யதிராஜவிம்சதி
(இ) திருமந்த்ரம் (ஈ) இராமானுஜ நூற்றந்தாதி

97. சடகோபன் பொன்னடி என்ற சிறப்புப் யெரை இராமானுஜருக்கு சூட்டியவர் யார் ?
(அ) திருமாலையாண்டான் (ஆ) திருக்கண்ணமங்கையாண்டான்
(இ) கூரத்தாழ்வான் (ஈ) மணக்கால்நம்பி

98. ஸ்ரீவைஷ்ணவநம்பி என்று எந்த திவ்யதேசத்து எம்பெருமானைக் கொண்டாடுகிறோம் ?
(அ) திருவரங்கம் (ஆ) திருமலை
(இ) திருக்குறுங்குடி (ஈ) காஞ்சிபுரம்

99. பஞ்சநாராயண ப்ரதிஷ்டையை நாராயணனுக்கே ஏற்பட்ட ஐந்து திருக்கோயில்களை அமைத்திட இராமானுஜருக்கு உதவிய ஹொய்சாள மன்னன் பெயர் என்ன ?

(அ) வீரநரசிம்மன் (ஆ) வீரவல்லாளன்
(இ) விஷ்ணுவர்த்தனன் (ஈ) வீரராமநாதன்

100. பொல்லா அரக்கன் யார் ? நல்ல அரக்கன் யார் ?
(அ) ராவணன்–விபீடணன் (ஆ) ராவணன்–கும்பகர்ணன்
(இ) ராவணன்–இந்திரஜித் (ஈ) கரன்–தூஷணன்

101. புள்ளின் வாய் கீண்டவன் யார் ?
(அ) அகாசுரன் (ஆ) பகாசுரன்
(இ) சகடாசுரன் (ஈ) தேனுகாசுரன்

102. ஆண்டாள் அவதரித்த ஊரில் எழுந்தருளியுள்ள எம்பெருமானின் பெயர் என்ன ?
(அ) ரெங்கமன்னார் (ஆ) அழகியமணவாளன்
(ஆ) ஸ்ரீனிவாசன் (ஈ) வடபத்திரசாய்

103. விஷ்ணுவை சந்தோஷப்படுத்தும் புஷ்ப வகைகளின் எண்ணிக்கையை அடையாளம் காண்க.
(அ) 3 (ஆ) 5
(இ) 8 (ஈ) 7

104. எந்த ஷேத்திரத்தில் ஸ்ரீஇராமானுஜர் கிருஹஸ்த வஸ்திரத்துடன் த்ரிதண்டம் இன்றி சேவை சாதிக்கிறார் ?
(அ) வடுவூர் (ஆ) திருநாராயணபுரம்
(இ) ஸ்ரீபெரும்புதூர் (ஈ) மதுராந்தகம்

105. எந்த ஆசார்யருடைய ஸ்ரீஸூக்திகள் எம்பெருமானை வசப்படுத்துபவையாகவும், உபநிஷதங்களுக்கு அணிகளாகவும் விளங்குகின்றன.
(அ) பராசரபட்டர் (ஆ) ஆளவந்தார்
(இ) இராமானுஜர் (ஈ) வேதாந்ததேசிகர்

106. எந்த பெருமானால் ஸ்ரீராமானஜருக்கு "எதிராஜன்" என்ற திருநாமம் வழங்கப்பெற்றது.
(அ) அரங்கன் (ஆ) அருளாளன்
(இ) ஆதிகேசவன் (ஈ) திருநாராயணன்

107. எம்பெருமானிடத்தில் தன்னைக் காக்குமாறு அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்த ஆழ்வார் யார் ?
(அ) திருமங்கை ஆழ்வார் (ஆ) நம்மாழ்வார்
(இ) பெரியாழ்வார் (ஈ) குலசேகர ஆழ்வார்

108. திருப்பாவையில் " நாயகன்" என்று தொடங்கும் பாசுரத்தில் அந்த சொல்லால் குறிக்கப்படும் ஆசார்யன் யார் ?
(அ) நாதமுனிகள் (ஆ) ஆளவந்தார்
(இ) ஸ்ரீராமானுஜர் (ஈ) வேதாந்ததேசிகர்

109. "தசக்ரீவன்" என்று குறிப்பிடப்படுபவன் யார் ?
(அ) ஹயக்ரீவர் (ஆ) விபீஷணர்
(இ) ராவணன் (ஈ) தசரதன்

110. ஆண்டாள் அவதரித்த நக்ஷத்திரம் ?
(அ) வைகாசி விசாகம் (ஆ) மாசிமகம்
(இ) ஆடிப்பூரம் (ஈ) ஆடி உத்திராடம்

111. இராமானுஜர் எந்த இடத்தில் யாதவ பிரகாசர் குழுவினரை விட்டு வெளியேறினார் ?
(அ) மஹேந்திரகிரி (ஆ) விந்தியமலை
(இ) இமயமலை (ஈ) ஆரவல்லி

112. கங்கையில் நீராடும்போது இராமானுஜரின் தமயன் கோவிந்தனின் கைகளில் என்ன கிடைத்தது ?
(அ) சிவலிங்கம் (ஆ) நடராஜர்
(இ) விநாயகர் (ஈ) முருகன்

113. இராமானுஜர் தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை யாரை கொண்டு தெளிவு பெற விரும்பினார் ?
(அ) வெங்கடேச பெருமாள் (ஆ) வரதராஜபெருமாள்
(இ) பெரியபெருமாள் (ஈ)நரசிம்மர்
114. கூரத்தாழ்வானின் இயற்பெயர் என்ன ?
(அ) திருமருமார்பர் (ஆ) பிள்ளையுறங்கா வில்லிதாசர்
(இ) எம்பார் (ஈ) நஞ்ஜீயர்
115. திருப்பாவை 24ம் பாசுரத்தில் எத்தனை போற்றிகள் இடம்பெற்றுள்ளது ?
(அ) 4 (ஆ) 5
(இ) 6 (ஈ) 8
116. இராமானுஜர் கோவிந்தனை ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்திற்கு அழைத்துவர துணைபுரிந்தவர் யார் ?
(அ) திருக்குறுகூர் நம்பி (ஆ) திருக்கோட்டியூர் நம்பி
(இ) திருக்கச்சிநம்பி (ஈ) திருமலைநம்பி
117. இராமானுஜர் தனது ஆசாரியனை சந்திக்க எந்த இடத்திலிருந்து புறப்பட்டார் ?
(அ) திருவரங்கம் (ஆ) காஞ்சீபுரம்
(இ) ஸ்ரீபெரும்புதூர் (ஈ)திருமயிலை
118. இராமானுஜர் எந்த இடத்திலிருந்து தான் அறிந்த ரகசியத்தை ஆசையுள்ளோர் அறியச் செய்தார் ?
(அ) புஷ்பக விமானம் (ஆ) பத்ம விமானம்
(இ) பிரணவாகார விமானம் (ஈ) அஷ்டாங்க விமானம்
119. பிள்ளையுரங்கா வில்லிதாசர் அரங்கனின் கண் அழகைக் கண்டு என்ன மாற்றம் பெற்றார் ?
(அ) இராமானுஜருக்கும் அரங்கநாதனுக்கும் அடிமை ஆனார் (ஆ) அரங்கநாதனுக்கு அர்ச்சகர் ஆனார்
(இ) இராமானுஜரையும் அரங்கனையும் வணங்கினார் (ஈ) துறவியானார்
120. இராமானுஜர் ஆளவந்தாருடன் தன் சம்பந்தத்தை எப்படி குறிப்பிட்டார் ?
(அ) அர்ஜுனனும் துரோணாசாரியும் போல் (ஆ) துர்யோதனனும் துரோணாசாரியும் போல்
(இ) கர்ணனும் துரோணாசாரியும் போல் (ஈ) ஏகலவ்யனும் துரோணாசாரியும் போல்
121. திருவரங்கப் பெருமாள் அரையரிடம் இராமானுஜர் என்ன கற்றார் ?
(அ) ஸ்ரீராமாயணம் (ஆ) ஸ்ரீமத்பாகவதம்
(இ) மஹாபாரதம் (ஈ)நாலாயிர திவ்ய பிரபந்தம்
122. இராமானுஜரின் ஆசார்யர்கள் எத்தனை பேர் ?
(அ) ஒரு ஆசாரியர் (ஆ) 2 ஆசார்யர்கள்
(இ) 10 ஆசாரியர்கள் (ஈ) 5 ஆசாரியர்கள்
123. மாறநேரி நம்பியின் இறுதிச் சடங்கினை யார் நிறைவேற்றினார்கள் ?
(அ) திருமலை நம்பி (ஆ) பெரியநம்பி
(இ) எம்பார் (ஈ)திருமலை ஆண்டான்
124. இராமானுஜர் விஷம் கலந்த உணவு பிச்சையாக அளிக்கப் பெற்று அந்த சூழ்ச்சியிலிருந்து எப்படி தப்பித்தார் ?
(அ) பாசுரங்கள் பாடியபடி (ஆ) பஜனை பாடல்களை பாடி
(இ) கடவுளை வணங்கி (ஈ) பிச்சையிட்ட பெண்ணின் கண்களில் நீர் நிறைந்திருப்பது கண்டு
125. இராமானுஜர் யஞ்ஞமூர்த்தியை எந்த நூலின் துணை கொண்டு வாதத்தில் வென்றார்
(அ) ஆளவந்தாரின் அகண்ட மாயாவாத கண்டனம் (ஆ) ஸ்ரீவிஷ்ணு சகஸ்ரநாமம்
(இ) திருப்பாவை (ஈ) திருப்பல்லாண்டு
126. வாதபோரில் தோற்ற யஞ்ஞமூர்த்தி இராமானுஜரின் சீடனாக மாறியபின் பெற்ற பெயர் என்ன ?
(அ) பெரியவாச்சான்பிள்ளை (ஆ) பிள்ளையுறங்கா வில்லிதாசர்
(இ) தாசரதி (ஈ)அருளாள பெருமாள் எம்பெருமானார்

127. திருமலையில் ராஜகோபுரத்தின் பெயர் என்ன ?
(அ) கருட கோபுரம் (ஆ) அரங்க கோபுரம்
(இ) புண்ணியகோடி கோபுரம் (ஈ)ஆனந்த கோபுரம்
128. திருமலை நம்பியிடம் இராமானுஜர் எத்தனை வருடங்கள் பாடம் கற்றார் ?
(அ) ஒரு வருடம் (ஆ) மூன்று வருடங்கள்
(இ) ஐந்து வருடங்கள் (ஈ)ஒன்பது வருடங்கள்
129. திருவரங்க கோயிலின் பராமரிப்பு பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்பட்டது ?
(அ) கோயில் கந்தாடை அண்ணன் (ஆ) அழகிய சிங்கர்
(இ) கூரகுலோத்தமதாசர் (ஈ)திருவரங்கத்தமுதனார்
130. இராமானுஜ நூற்றந்தாதியின் மற்றொரு பெயர் ?
(அ) ஸ்தோத்திர ரத்தினம் (ஆ) திருப்பாவை
(இ) பிரபன்ன காயத்ரி (ஈ)அஷ்டஸ்லோகி
131. ஸ்ரீபாஷ்யம் எதை விளக்கமாக கூறியுள்ளது ?
(அ) ராமசூத்திரங்கள் (ஆ) கிருஷ்ண சூத்திரங்கள்
(இ) விஷ்ணு சூத்திரங்கள் (ஈ) பிரம்ம சூத்திரங்கள்
132. இராமானுஜர் எந்த நாளில் சரணாகதி செய்தார் ?
(அ) பங்குனி உத்திர திருநாள் (ஆ) ஆதிபிரம்மோத்ஸவம்
(இ) பூபதி திருநாள் (ஈ)வைரமுடி நாள்
133. கூரத்தாழ்வானின் உறுதியான பதிலைக் கேட்ட சோழ மன்னன் என்ன செய்தான்
(அ) அவரை கொல்ல உத்தரவிட்டார் (ஆ) அவரின் நாக்கை துண்டிக்க சொன்னார்
(இ) அவரின் கண்கள் பிடுங்க சொன்னார் (ஈ) அவரின் கைகளை வெட்ட சொன்னார்
134. இராமானுஜர் விக்ரஹம் அவர் வாழும் காலத்தில் ஸ்ரீபெரும்புதூரில் பிரதிஷ்டை செய்தவர்
(அ) வேதாந்தி ஆழ்வான் (ஆ) கோமடம் ஆழ்வான்
(இ) அனந்தாழ்வான் (ஈ)கந்தாடை ஆண்டான்
135. எந்த ஆழ்வார் திருவரங்கத்தை மட்டுமே மங்களாசாசனம் செய்துள்ளார் ?
(அ) குலசேகர ஆழ்வார் (ஆ) மதுரகவி ஆழ்வார்
(இ) தொண்டரடிப்பொடி ஆழ்வார் (ஈ) நம்மாழ்வார்

# ***விடைகள்***

| | | | | |
|---|---|---|---|---|
| 1. அ | 2. ஈ | 3. ஆ | 4. அ | 5. இ |
| 6. இ | 7. ஈ | 8. அ | 9. ஈ | 10. ஆ |
| 11. அ | 12. இ | 13. ஈ | 14. அ | 15. அ |
| 16. இ | 17. இ | 18. அ | 19. இ | 20. ஆ |
| 21. அ | 22. அ | 23. ஆ | 24. இ | 25. அ |
| 26. ஆ | 27. ஆ | 28. ஆ | 29. ஈ | 30. ஈ |
| 31. அ | 32. ஈ | 33. ஆ | 34. ஆ | 35. அ |
| 36. ஆ | 37. அ | 38. ஈ | 39. அ | 40. அ |
| 41. ஆ | 42. அ | 43. ஆ | 44. ஆ | 45. ஈ |
| 46. ஆ | 47. அ | 48. அ | 49. ஈ | 50. ஈ |
| 51. அ | 52. அ | 53. ஈ | 54. ஆ | 55. அ |
| 56. ஈ | 57. அ | 58. அ | 59. அ | 60. இ |
| 61. இ | 62. இ | 63. அ | 64. அ | 65. ஈ |
| 66. ஈ | 67. அ | 68. ஈ | 69. ஈ | 70. இ |
| 71. அ | 72. இ | 73. அ | 74. இ | 75. அ |
| 76. ஈ | 77. இ | 78. ஆ | 79. | 80. அ |
| 81. இ | 82. இ | 83. ஆ | 84. ஈ | 85. ஈ |
| 86. ஆ | 87. அ | 88. ஆ | 89. ஆ | 90. ஆ |
| 91. அ | 92. அ | 93. ஆ | 94. இ | 95. ஆ |
| 96. ஈ | 97. அ | 98. இ | 99. இ | 100. அ |
| 101. ஆ | 102. ஈ | 103. இ | 104. ஈ | 105. இ |
| 106. ஆ | 107. இ | 108. இ | 109. இ | 110. இ |
| 111. ஆ | 112. அ | 113. ஆ | 114. அ | 115. இ |
| 116. ஈ | 117. ஆ | 118. ஈ | 119. அ | 120. ஈ |
| 121. ஈ | 122. ஈ | 123. ஆ | 124. ஈ | 125. அ |
| 126. ஈ | 127. ஈ | 128. அ | 129. ஈ | 130. இ |
| 131. ஈ | 132. அ | 133. இ | 134. ஈ | 135. இ |